DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 102/2020
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | லோகநாதன் |
| Father / Husband Name | நடராஜன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **21.01.2026**

**குறுக்கு விசாரணை:**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தொழுப்பேட்டில் வெல்டிங்கடை வைத்துள்ளேன். மேற்படி கடையை எவ்வளவு காலமாக வைத்துள்ளேன் என்றால் 2010 ம் வருடத்தில் இருந்து வைத்துள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வீராணம் சாலையில் அலுவலகம் வைத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் மேற்படி வெல்டிங்கடை தொடர்புடைய அலுவலகம் ஆகும். NR இண்டஸ்ட்ரீஸ் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது மேற்படி வெல்டிங்கடையின் பெயர் தான் என்றால் சரிதான். மேற்படி இண்டஸ்ட்ரீஸ் சட்டப்படி பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். நான் 2010 ல் பதிவு செய்துள்ளேன்.

2. மேற்படி அலுவலகம் புதுப்பிக்கபட்டதற்கான ஆவணம் ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எதிரியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 2018 ல் இருந்து எனக்கு பழக்கம் ஆனார். மேற்படி விவரத்தை மனு பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் அறுவடை இயந்திரத்தை பழுது பார்க்கும் வேலை செய்து வருபவர் என்றால் சரிதான். வழக்கு காசோலையை கொடுப்பதற்கு முன்பு எதிரி எத்தனை முறை என்னிடம் அறுவடை இயந்திரத்தை பழுது பார்க்க வந்துள்ளார் என்றால் 2018 ல் மேற்படி வாகனத்தை பழுது பார்க்க வந்துள்ளார். மேற்படி வாகனத்தை பழுது பார்க்க எதிரி எனக்கு மொத்தம் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்றால் நான் அதற்கான ரசீது வைத்துள்ளேன். அதனை பார்த்து தான் சொல்ல முடியும். மேற்படி மொத்த தொகையில் எவ்வளவு பொருட்கள் வாங்கியதற்கான செலவு மற்றும் கூலி எவ்வளவு என்றால் நான் அதற்கான ரசீது வைத்துள்ளேன். அதனை பார்த்து தான் சொல்ல முடியும்.

3. என்னுடைய பிரமாண வாக்குமூலம் மற்றும் மனுவில் எதிரி எனக்கு மொத்தம் தர வேண்டிய தொகையில் எவ்வளவு தொகைக்கு பொருட்கள்

வாங்கியுள்ளேன் என்றும், கூலி எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லாமல் ரூபாய் 130000 க்கு வழக்கு காசோலையை கொடுத்துள்ளார் என்று குறிப்பிட்டு இருப்பதால் எதிரி எனக்கு எந்த தொகையும் கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. மேற்படி எதிரி அவருடைய வாகனத்தை எப்போது எனது கடையில் பழுது பார்ப்பதற்கு விட்டு சென்றார் என்றால் 2018 ம் வருடத்தில் விட்டு சென்றார். தேதி மாதம் குறிப்பிட்டு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வாகனத்தை எப்போது எதிரியிடம் பழுது பார்த்து ஒப்படைத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வாகனத்தை எதிரி எப்போது எடுத்து சென்றார் என்றால் 2018 ம் வருடம் எடுத்து சென்றார். அப்போது தான் எனக்கு தரவேண்டிய பாக்கி தொகை ரூபாய் 130000 ஐ எதிரியிடம் கேட்டேன். எதிரியிடம் நான் எத்தனை முறை கேட்டேன் என்றால் போன் மூலமும் மற்றும் பல முறை என்னிடம் வேலை செய்யும் ஆட்களை அனுப்பியும் கேட்டுள்ளேன். மேற்படி காசோலையை எதிரியிடமிருந்து வாங்கி வந்த நபரின் பெயர் என்னவென்றால் பொன்னிவலவன் ஆகும்.

4. வழக்கு காசோலையை என்னிடம் வேலை செய்யும் பொன்னிவலவன் என்பவரிடம் எதிரியின் மனைவி கொடுத்தார். மேற்படி காசோலையை எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 2020 ம் வருடம் கொடுத்தார். மாதம் மற்றும் தேதி சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு காசோலையில் தேதி மற்றும் மாதம் யார் நிரப்பியது என்றால் எதிரி தான் நிரப்பி கொடுத்தார். மேற்படி காசோலையை என்னிடம் பொன்னிவலவன் எப்போது கொடுத்தார் என்றால் காசோலை கொடுத்த மறுநாள் என்னிடம் கொடுத்தார். 14.09.2020 தேதி அன்று கொடுத்த காசோலையை எப்போது வங்கியில் செலுத்தினேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. வழக்கு காசோலையை நான் வங்கியில் கால தாமதமாக செலுத்தியதற்கான காரணம் என்னவென்றால் எதிரி அவர் சொல்லும் போது காசோலையை செலுத்துமாறு கூறினார். நான் சொல்வது தவறு என்றாலும் எதிரி அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5. வழக்கு காசோலை எந்த வங்கியுடையது என்றால் இந்தியன் வங்கி கரையான்புத்தூர் கிளையுடையது ஆகும். மேற்படி காசோலையின் எண் என்னவென்றால் 003352 ஆகும். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் கருப்புமையினால் நிரப்பப்பட்டுள்ளது மற்றவை நீலநிற மையினால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் அவர் கொடுத்த காசோலையை தான் நான் வங்கியில் செலுத்தினேன். நான் எதுவும் எழுதவில்லை. நான் எதிரியிடம் மேற்படி காசோலையில் வேறு மையினால் நிரப்பி இருப்பது குறித்து கேள்வி கேட்டேனா என்றால் இல்லை. மேற்படி காசோலையில் தொகையை எழுத்தினால் நிரப்பப்பட்டதில் ONE LAKH என்ற வார்த்தை மற்றதை விட சிறியதாக உள்ளதால் அது இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி காசோலையில் தொகையை எண்ணால் நிரப்பப்பட்டுள்ளதில் 1 30 க்கு பின்னர் கமா உள்ளதால் அது 30 ஆயிரத்திற்கு கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரியல்ல. மேற்படி காசோலையில் நான் கருநிலை திருத்தம் செய்துள்ளதால் மேற்படி காசோலை ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.